Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.II, Tindivanam.

**CASE NO.CC No. 20/2011**
**Prosecution witness – PW – 4**

| | | | |
|---|---|---|---|
| **DATE** | **: 21.06.2025** | | |
| Name | : திரு.சா.ஆரோக்கியராஜ். | Caste | : |
| Father Name | : சாலமன். | Calling | : |
| Village/city | : திண்டிவனம். | Religion | : |
| Taluk | : | Age | : 63 |

(எதிரி ஆஜர்)

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வெங்கடசாமி 3 ஆண்டுகள் மட்டும்தான் பிரம்மதேச வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வட்ட களமேளாராக இருந்தார் என்றால் சரிதான்.மொத்தம் 27 கூட்டுறவு வேளாண்மை தொடக்க சங்கமும் விவசாய அல்லாத 3 சங்கத்திற்கும் வெங்கடசாமிதான் வட்ட கள மேளாளராக இருந்தார் என்றால் சரிதான். ஒவ்வொரு ஆண்டும் ஆண்டு கடன் மனு எவ்வளவு என்று சங்க செயலாளர் மற்றும் தனி அலுவலர்தான் நிர்ணயம் செய்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு அனுப்புவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அனுப்பியதன் அடிப்படையில் தான் வட்ட களப்பணியாளருக்கு கடிதம் அனுப்பி கடன் அனுமதி வழங்குவார்கள் என்றால் சரிதான். பிரம்மதேசம் வங்கியை தவிர மற்ற வேறு எந்த இடத்திலும் இது போன்ற முறைகேடுகள் நடக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வெங்கடேசன் வட்டகள மேலாளராக இருந்தபோது நான் சேல்ஸ் இருந்தேனா என்றால் திண்டிவனம் மற்றும் வானூர் வட்டங்களில் 60 தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு விற்பனை அலுவலராக பணி புரிந்தேன். தவணை தவறிய கடன்களுக்கு மத்தியஸ்தம் செய்தீர்களா என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில்

மத்தியஸ்தராக இருந்தேனா என்றால் இருந்தேன். நான் மத்தியஸ்தராக இருந்த உத்தரவு பிறப்பித்துவிட்டு பின்னா் நானே விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தேனா என்றால் சரிதான். நான் ஆவணங்களை பார்த்தால் எந்தெந்த கடன்களுக்கு மத்தியஸ்தம் செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்ல முடியும் என்றால் சரிதான். ஆண்டுக்கடன் மற்றும் பட்டுவாடா விண்ணப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். பட்டுவாடா விண்ணப்பத்தில் கையொப்பம் செய்வது களமேலாளரின் பொருப்பு இல்லை என்றால் சரியல்ல அவருடைய கடமையாகும். கையொப்பம் செய்யவேண்டுமென்று தலைமை இடத்திலிருந்து அவருக்கு எந்த உத்தரவும் இல்லையென்றால் சரியல்ல. பிரம்மதேசம் கூட்டுறவு கடன் சங்கத்தில் 13 வது எதிரி சம்பளம் வாங்கும் நபா் இல்லையென்றால் சரியல்ல. கூட்டுறவு விரிவாக்க அலுவலா்களாக சிவக்குமாா், சூரியமூா்த்தி, ராமச்சந்திரன் ஆகியோா் இருந்தாா்கள் என்றால் சரிதான். மேற்படி நபா்கள் மீது நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அவா்களின் மீது துறை ரீதியான நடவடிக்கைக்கு பரிந்துரை செய்துள்ளேன். 01.01.2003லிருந்து 30.11.2004 வரை 13வது எதிரி பணியில் இல்லை ஓய்வு பெற்றுவிட்டாா், ஆனால் அந்த காலக்கட்டத்திலும் முறைகேடு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரம்மதேசம் கூட்டுறவு நிா்வாகமும், விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி நிா்வாகமும் தனித்தனி என்றால் சரிதான், ஆனால் நிதி ஒன்றுதான். கூட்டுறவு வங்கி பணியாளா் மீது குற்றம் சுமத்துவது தவறானது என்றால் சரியல்ல. 27 கூட்டுறவு வங்கியிலும் 13 வது எதிரிதான் அதிகமாக வசூல் செய்து கொடுத்துள்ளாா் என்றால் சரிதான். ந.க. எண். 3405/99-2000 13 வது எதிரி எந்த கடன் மனுக்களுக்கும் பரிந்துரை செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த கடன்பட்டுவாடா மனுக்களுக்கும் 13 வது எதிரி பரிந்துரை செய்யவில்லை என்றால் சரியல்ல. பொய்யான முறையில் பட்டுவாடா செய்திருந்தால் மேற்படி கடன் பட்டுவாடா மனுக்களுக்கு பரிந்துரை செய்திருப்பாா் என்றாலும் அவா் மீது பொய்யாக குற்றம் சுமத்தியுள்ளாா்கள் என்றால் சரியல்ல. நான் எத்தனை நபா்களிடம் வாக்குமூலம் பெற்றிருந்தேன் என்றால் 340 நபா்களிடம் பெற்றிருந்தேன். 340 நபா்களுடைய வாக்குமூலத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் 166 இனங்கள் தான் கொடுத்துள்ளேன் என்றாலும் நான் அந்த 166 இனங்களில் வரிசை எண் 3 முதல் 8 வரை உள்ள 6 கடன்கள் தவணை தவறிய காரணத்தால் சேல்ஸ் ஆபிசா்களால் தீா்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஒருதலைப்பச்சத்தில்

பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி 6 இனங்களில் நானே சேல்ஸ் ஆபிசராக இருந்து தீர்ப்பாணை பிறப்பித்துவிட்டு அதில் நானே விசாரணை அதிகாரியாக உள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 3 முதல் 8 இனங்களில் குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு அதற்கு பின்னிட்டு கடன் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறானதாகும். நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு எந்த ஆய்வும் செய்யவில்லை என்றாலும் செயலாளருக்கு உடந்தையாக இருந்துள்ளேனா என்றால் சரியல்ல. 6 மாதத்திற்குள் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கமுடியும் என்றால் சரிதான். 13 வது எதிரியின் காலக்கட்டத்தில் எந்த கடனும் வழங்கப்படவில்லை என்றாலும், வட்டக்கள மேலாளருக்கு நேரடியாக கடன் கொடுக்கும் அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல. தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டப்பிரிவு 87(1) ன் படி 7 ஆண்டுகளுக்கு பிறகு நடவடிக்கை எடுக்க முடியாது என்றால் சரியல்ல.

## <u>17 வது எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போலிசிடம் சொன்ன விவரத்தை தான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்பொழுது நான் கூட்டுறவு சங்க துணைப்பதிவாளராக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். என்னை விசாரணை அலுவலராக நியமனம் செய்தபோது நான் எங்கு பணிபுரிந்தேன் என்றால் செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கூட்டுறவு சார்பதிவாளர்/ தனிஅலுவலராக பணியாற்றினேன். நான் நியமனம் செய்வதற்கு முன்பு திண்டிவனம் தலைமையிடமாக கொண்ட விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கிளை திண்டிவனம் மற்றும் வானூர் வட்டங்களில் விற்பனை அலுவலராக பணிபுரிந்தேன். எந்த கடன் மனுக்களுக்கும் பரிந்துரை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பணியிலிருந்த பொழுது எத்தனை மனுக்கள் மீது தீர்ப்பாணை பிறப்பித்துள்ளேன் என்றால் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளேன், ஆனால் எண்ணிக்கை எனக்கு தெரியாது. நான் பணிபுரிந்த 2 ஆண்டு காலக்கட்டத்தில் நான்தான் அனைத்து கடன் மனுக்களுக்கும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளேன் என்றால் மனு எண் குறிப்பிட்டால் என்னால் சொல்ல முடியும். எத்தனை மனுக்கள் மீது வசூல் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் எதுவுமில்லை. என்னை விசாரணை அதிகாரியாக நியமனம் செய்யவேண்டுமென்று திண்டிவனம் துணைப்பதிவாளரிடம் கேட்டேனா என்றால் இல்லை. நானாக தான் என்னை விசாரணை அதிகாரியாக நியமனம் செய்ய சொல்லி கேட்டேன் என்றால் சரியல்ல. ஒரு வங்கியில் முறைகேடு நடந்தால் அதை விசாரிப்பதற்காக கூட்டுறவு விரிவாக்க

நபர்கள் 11 பேரும், கூட்டுறவு சார்பதிவாளர் பண்ணை 3 பேரும் மொத்தமாக 14 பேரும் இருப்பார்கள் என்றால் விசாரணை செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு விசாரணை செய்வதற்கு 14 நபர்கள் இருக்கும்போது என்னை எதற்காக நியமனம் செய்தார்கள் என்றால் துணைப்பதிவாளரைத்தான் கேட்க வேண்டும். நான் பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் விற்பனை அலுவலராக பணிபுரிந்துவிட்டு என்னை விசாரணை அதிகாரியாக நியமனம் செய்தது தவறு என்றால் சரியல்ல. என்னை விசாரணை அலுவலராக நியமனம் செய்த ஆணை என்னிடம் எப்போது கிடைக்கப்பட்டது என்றால் 03.01.2005 ல் கிடைக்கப்பெற்றது. நான் விசாரணையை தொடங்கும்போது யாருடைய நிர்வாகத்தில் பிரம்மதேசம் கூட்டுறவு சங்கம் இருந்தது என்றால் தனி அலுவலர் திரு.மா.கருணாநிதி. அவருடைய பணிக்காலம் 10.03.2003 முதல் 11.02.2005 வரை பணியாற்றியுள்ளார். என்னை விசாரணை அதிகாரியாக ஆணையை யார்யாரிடம் கொடுக்கவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். சங்க உதவி செயலாளரிடம் வழங்கியுள்ளேன். எனது நியமன ஆணையை தனி அலுவலரிடம் கொடுத்திருக்கவேண்டும் என்றாலும், நான் சம்மந்தம் இல்லாத நபரிடம் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. சட்டப்பிரிவு 81 ன்படி விசாரணைக்கு சென்றபோது நான் யாரிடம் விசாரணைக்கு சொல்லியுள்ளேன் என்றால் தனி அலுவலர், செயலாளர் மற்றும் உதவி செயலாளரிடம் சொல்லியுள்ளேன். நான் சொல்லுவது போல் தனி அலுவலர், செயலாளர் மற்றும் உதவி செயலாளரிடம் விசாரணைக்கு வந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. அது தொடர்பாக மேற்படி நபர்களிடம் கையொப்பம் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லுவது போல் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

//திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்